# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)



# “மும்மலபேதமும் சிருட்டியும்” - விளக்கம்

## பகுதி 8 - 11/05/2025

வழங்குபவர்



**திரு. லோக. ஆனந்த பாரதி**

**Vallalar Universal Mission - USA**

# மும்மலபேதமும் சிருட்டியும்

- ✓ இக்குறிப்பு, ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் பதிப்பில் திருவார்த்தைச் குறிப்புக்களில் 27-வது குறிப்பாக ‘கன்மபேதமும் சிருஷ்டிக்கிரமமும்’ என்னும் தலைப்பிலும்,

- ✓ ஊரன் அடிகளார் பதிப்பில், “மும்மலபேதமும் சிருட்டியும்” என்னும் தலைப்பில் 10 வது குறிப்பாகவும் அமைந்துள்ளது.

- ✓ “ஆணவம் மாயை கன்மம்” இது தொடர்பான சிறு குறிப்பு (72) ஆகும்.

- ✓ ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களின் பேதம் பற்றியும், அவ்வேறுபாட்டினால் மூவகை ஆன்மப் பிறப்பு உண்டாவது பற்றியும் இந்த குறிப்பு விளக்குகின்றது.

# மும்மலபேதமும் சிருட்டியும்

ஆணவம் மாயை கன்மம் என மலம் மூன்று.

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தொடர்புடைய குறிப்பு:

ஆணவம்: உயிரை அறியாமைப்படுத்தும் மூலமலம்.

உயிர்களின் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்றனையும் நிகழவிடாது தடுத்து, உயிர் என்ற ஒன்றே உண்டு என்பதே தோன்றாதவாறு மறைத்துத் தானேயாய் நிற்பது ஆணவமாகும்.

87. ஆணவ மல நிவர்த்தி

மனுஷ்ய வல்லபத்தால் தனக்கிருக்கிற அசுத்தங்களை நிவர்த்தி செய்துகொள்ளக் கூடுமா வென்றால்: இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியும் ஞானத்தால் விஷய வாசனையில் கரணங்களைச் செல்ல வொட்டாமல் தடுக்கக்கூடுமே ஒழிய, நிவர்த்திக்கக் கூடாது. அது ஆண்டவரருளால் சுத்ததேகம் பெற்றவர்களால்தான் முடியும். அது அருளொளி கிடைத்தால் அத்தருணமே சுத்தக்கரணமாய் நிற்கும். அசுத்தம் வருவதற்குக் காரணம் யாதெனில் செம்பிற் களிம்பு இயற்கை. அதுபோல் ஆன்மாவிற்கு ஆணவம் இயற்கை. செம்பிலே களிம்பு இயற்கையா யுள்ளதைப் பரிசனவேதியினால் நிவர்த்தித்து ஏமமாக்குவது போல், மாயாகாரியமான இந்தத் தேகத்தின்கண் உள்ள ஆன்ம இயற்கையாகிய ஆணவமலம் ஆண்டவரருளினால் நீங்கப்பெற்றுச் சுத்த உடம்பாக்கிக் கொள்ளலாம். ஆண்டவர் அருள் அடைவதற்கு, நாம் இடைவிடாது நம்முயற்சியின்கண் பழகுதல் வேண்டும்.

"ஓடாது மாயைநீ ஊடாது நன்னெறிவீடா தெனச் சொன்னீர் வாரீர் வாடா திருவென்றீர் வாரீர்*

# மும்மலபேதமும் சிருட்டியும்

ஆணவம் மாயை கன்மம் என மலம் மூன்று.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

விளக்கக் குறிப்புகள்:

கன்மம்: கன்மம் என்பது வினை என்றும் ஊழ் என்றும் சொல்லப்படும்.
(சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் )

உயிர்கள் வினையை அனுபவித்தே, ஆகவேண்டும் என்பது அடிப்படைக் கொள்கையாகும். இந்தக் கன்மமாகிய வினைதான் பிறப்புக்கும், அதன்கண் உளவாகும் இன்ப துன்ப வினைக்கும் காரணமாகும்.

தீவினைநல் வினையெனும்வன் கயிற்றால் இந்தச்
சீவர்களை ஆட்டுகின்ற தேவே (மகாதேவ மாலை (86)

மாயை: உலகத்திற்கு வித்தாக அமைவது. (சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை)

உயிருக்கு உடல், கருவி, நுகர்ச்சிப்பொருள் ஆகியவற்றைத் தருவது. ஆணவத்தால் மறைக்கப்பெற்ற உயிரைச் சிறிது விளக்கம் செய்வது. ஆணவத்தின் கொடிய செயலை நீக்குவதற்கு இறைவனால் பயன்படுத்தக் கூடியது.

#6-037 ஆறாம் திருமுறை / அருள்விளக்க மாலை
ஆணவமாம் இருட்டறையில் கிடந்தசிறி யேனை
அணிமாயை விளக்கறையில் அமர்த்திஅறி வளித்து

# மும்மலபேதமும் சிருட்டியும்

இதில் பக்குவம் 3, அபக்குவம் 3 - ஆக 6. இவை ஒவ்வொன்றும் மும்மூன்றாக விரிதலின் 18 ஆம்.

இந்தக் கன்ம பேதத்தால் அருட்சத்தியின் சமுகத்தில் எழுவகைத் தோற்ற முண்டானது.

---

விளக்கக் குறிப்புகள்:

| | பக்குவம் எண் | பேதம் | | | அபக்குவம் எண் | பேதம் |
|---|---|---|---|---|---|---|
| ஆணவம் | 1 | பக்குவ ஆணவம் | | ஆணவம் | 1 | அபக்குவ ஆணவம் |
| | 2 | பக்குவ ஆணவ மாயை | | | 2 | அபக்குவ ஆணவ மாயை |
| | 3 | பக்குவ ஆணவ கன்மம் | | | 3 | அபக்குவ ஆணவ கன்மம் |
| மாயை | 1 | பக்குவ மாயை | | மாயை | 1 | அபக்குவ மாயை |
| | 2 | பக்குவ மாயை ஆணவம் | | | 2 | அபக்குவ மாயை ஆணவம் |
| | 3 | பக்குவ மாயை கன்மம் | | | 3 | அபக்குவ மாயை கன்மம் |
| கன்மம் | 1 | பக்குவ கன்மம் | | கன்மம் | 1 | அபக்குவ கன்மம் |
| | 2 | பக்குவ கன்ம ஆணவம் | | | 2 | அபக்குவ கன்ம ஆணவம் |
| | 3 | பக்குவ கன்ம மாயை | | | 3 | அபக்குவ கன்ம மாயை |

கன்மம் - வினை/செயல், வேறுபாடு, அருட்சத்தி – திருவருள்,

# மும்மலபேதமும் சிருட்டியும்

மேற்படி கன்ம மலத்தால் சிருட்டி உண்டாகும் விவரம் ஒருவாறு:-

பக்குவ ஆணவம், பக்குவமாயை - இவ் இரண்டினாலும் விஞ்ஞான கலாபேதம்.

அபக்குவமாயை, அபக்குவ கன்மம், அபக்குவ ஆணவம் கூடிய தேவ நரக பைசாசங்கள்.

பக்குவ மாயை, அபக்குவ கன்மம் கூடியது ஜீவர்கள்.

அபக்குவகன்மம், அபக்குவகன்ம ஆணவம், அபக்குவகன்ம மாயை - இவை கூடியது தாவர உயிர்கள். இதை விரிக்கில் பெருகும்.

---

தொடர்புடைய குறிப்பு:
67. மூவகை உயிர்கள்

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆக 3. சகலர் இயற்கையாகிய ஆணவம், இயற்கையில் செயற்கையாகிய மாயை. செயற்கையாகிய காமியம் அல்லது கர்மம் இம்மூன்று முள்ளவர். பிரளயாகல இயற்கையாகிய ஆணவம், இயற்கையில் செயற்கையாகிய மாயை இவ்விரண்டு முள்ளவர். விஞ்ஞானகலர் இயற்கையாகிய ஆணவம் மாத்திரம் உள்ளவர். சகலர் ஜீவர்கள். பிரளயாகலர் கல்ப தேகிகள். விஞ்ஞானகலர் காலாதீதர்கள். சுத்தம் 9, அசுத்தம் 9, ஆக 18.

VALLALAR UNIVERSAL MISSION, USA
INQUIRY OF TRUTH ◆ COMPASSION
சத்விசாரம் ◆ ஜீவகாருண்யம்
வள்ளலார் யூனிவர்சல் மிஷன், அமெரிக்கா

# துணை நூல்கள்

- ✓ திருஅருட்பா ஆறு திருமுறைகள்
- ✓ உபதேசப் பகுதி - பாலகிருஷ்ணன் பிள்ளை பதிப்பு - நான்காம் புத்தகம்.
- ✓ திருஅருட்பா உரைநடை - ஊரன் அடிகள் பதிப்பு.
- ✓ திருஅருட்பா - ச.மு.கந்தசாமிப் பிள்ளை பதிப்பு.
- ✓ திருஅருட்பா உரைநடை - தெய்வ நிலையப் பதிப்பு.
- ✓ திருஅருட்பாவை புரிந்து கொள்ள சைவ சித்தாந்தம் அவசியமா ?
- ✓ சைவ சித்தாந்தக் கொள்கைகள்

# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)

## ஐயம் தெளிதல்...

# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)



# "மும்மலபேதமும் சிருட்டியும்" - விளக்கம்

## பகுதி 8 - 11/05/2025



வழங்குபவர்

**திரு. லோக. ஆனந்த பாரதி**

**Vallalar Universal Mission - USA**